**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 146 /2019**

பெயர் : விஜயலட்சுமி P.W.1.

க/பெ. : ராஜகோபால்

தேதி : 17.10.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் என்னென்ன ஆவணங்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி தரப்பில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் S.A No.787/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் நான் ஆஜராகியுள்ளேனா என்றால் இல்லை. அதில் 23.10.2024 வரை இடைக்கால உறுத்தக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களில் உள்ள வழக்குகளை குறித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு நிலுவையில் உள்ளதால் மேற்படி ஆவணங்கள் மூலம் இந்த வழக்கில் எந்த பலனும் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.